# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1985 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, மாவனல்லை எக்ஸத் பௌத்த சங்க (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*[1985, ஏப்பிறல் மாதம் 10 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1985, ஏப்பிறல் மாதம் 11 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 60* *தபாற் செலவு : சதம் 60*

**1985 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க,**

**மாவனல்லே எக்ஸத் பௌத்த சங்க (கூட்டிணைத்தல்) சட்டம்**

**[1984, ஏப்றில் மாதம் 10 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]**

ச. வ.—ஓ. 1/84

**மாவனல்லே எக்ஸத் பௌத்த சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்**

"மாவனல்லே எக்ஸத் பௌத்த சங்கம்" என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான கழகமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கழகத்தினோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களேயும் பயனுற நிறைவேற்றும் நோக்கத்திற்காகவும் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காகவும் மாவனல்லேயில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : பாயிரம்.

சொல்லப்பட்ட கழகம் எக்குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களேயும், கருமங்களேயும் இதுவரை அது வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்களின் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1985 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, மாவனல்லே எக்ஸத் பௌத்த சங்க (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்வரும் (இதனகத்துப்பின்னர் "சங்கம்" என குறிப்பீடு செய்யப்படும்) மாவனல்லே எக்ஸத் பௌத்த சங்கத்தில் உறுப்பினர்களாக இப்போதுள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" என குறிப்பீடுசெய்யப்படும்) "மாவனல்லே எக்ஸத் பௌத்த சங்கம்" என்ற பெயரின் கீழும் மகுடத்தின் கீழும், இடையறுவழியுரிமை கொண்ட, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுதல் வேண்டும். அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம். அத்துடன் ஒரு பொது இலச்சினையை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியவாறு அதனை மாற்றவும், திருத்தவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் உடையதாதல் வேண்டும். மாவனல்லே எக்ஸத் பௌத்த சங்கத்தைக் கூட்டிணைத்தல்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படும் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :— கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) பௌத்த பிரசங்கங்களேயும், கலந்துரையாடல்களேயும், மாநாடுகளேயும் நடாத்துதல் ;

(ஆ) பௌத்த புத்தகங்களேயும், பருவ இதழ்களேயும், சஞ்சிகைகளேயும், துண்டுப்பிரசுரங்களேயும் அச்சிடுதலும், வெளியிடுதலும், விநியோகித்தலும் ;

ஏ 078327—2,800 (12/83)

(இ) வாசிகசாலைகளை தாபித்துப் பேணுதலும், பௌத்தத்தின் கற்கையை மேம்படுத்துதலும் அதைப் பரப்புதலும்;

(ஈ) பௌத்தம் நடைமுறையில் கடைப்பிடிக்கப் படுதலை ஊக்குவித்தல் ;

(உ) பௌத்த பண்பாட்டினதும் நல்லொழுக்கத்தினதும் முன்னேற்றத்துக்காக அவசியமான செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல் ;

(ஊ) பிரதேசத்தில் தேசிய, சமயரீதியான வழமைகளை ஊக்கி வளர்ப்பதன் மூலம் ஆன்மீகப் பண்புகளை விருத்திசெய்வதற்கு அவசியமான வழிவகைகளைச் செய்தலும் பௌத்த வாழ்க்கை நெறியை மேம்படுத்துதலும் ;

(எ) இன, சமய, குல அல்லது கட்சிச் சார்பைப் பொருட்படுத்தாது சமூக, நிதிசார் இடர்பாடுகளின்போது பிரதேசத்தின் ஆட்களுக்கு உதவி புரிதல்;

(ஏ) புத்தரின் போதனைகளுக்கிணங்க சமூக சேவை அலுவல்களைப் புரிதலும் அத்தகைய செயல் நிறைவேற்றங்களில் பௌத்தர்களை ஊக்குவித்தலும்;

(ஐ) சகல அரசியல் கருத்து வேறுபாடுகளிலிருந்தும், இன, குல, சமூக வேற்றுமைகளிலிருந்தும் அகன்று பௌத்தத்தின் சிறப்புரிமைகளைப் பாதுகாத்தல் ; அத்துடன்

(ஒ) அரசாங்கத்தின் உதவியுடன் அல்லது உதவியின்றி, அனாதை இல்லங்கள், முதியோர் விடுதிகள் போன்ற சமூக நிறுவனங்களைப்பேணுதல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனமானது அதன் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் மேம்படுத்துவதற்கு அவசியமானவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தத்துவம் கொண்டதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் நிதிகளைத் திரட்டுவதற்கும் வங்கிக் கணக்குகளைத் தொடங்குவதற்கும் செயற்படுத்துவதற்கும் முடிவுறுத்துவதற்கும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாது பணங்களைக் கடனாகப் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும், ஆளணியினரை வேலையில் ஈடுபடுத்துவதற்கும் வேலைக்கமர்த்துவதற்கும் வேலைநீக்கம் செய்வதற்கும் ஆன தத்துவங்களும் அடங்கும்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்படும் அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களைக் கொண்டமைந்த பணிப்பாளர் சபை ஒன்றினுல் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய நிருவகிக்கப்படல் வேண்டும். பணிப்பாளர் சபை.

(2) இச் சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் பதவிவகிக்கும் சங்கத்தின் பணிப்பாளர் சபை கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர் சபையாதல் வேண்டும்.

6. (1) கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான எல்லா அசைவற்ற ஆதனங்களதும் கட்டுக்காப்பானது, கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக்கு கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க உரித்தாக்கப்படல் வேண்டும். நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.

(2) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் பதவி வகிக்கும் சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையே கூட்டுத்தாபனத்தின் முதலாவது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையாதல் வேண்டும்.

7. (1) உறுப்பினரின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில், வாக்குப் பெரும்பான்மை கொண்டும் உறுப்பினரைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை அகற்றுதல் என்பனவற்றிற்காகவும், பணிப்பாளர் சபையினதும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினதும் குழுக்களினதும் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரினதும் கடமைகள் புரியப்படுவதற்காகவும், கூட்டுத்தாபனத்தின் அலுவல்களைக் கையாள்வதில் பின்பற்றவேண்டிய நடவடிக்கை முறைக்காகவும் அத்துடன் பொதுவாக அதன் அலுவல்களை முகாமை செய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும் என்பனவற்றுக்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும் அதேவிதமான ஒரு கூட்டத்தில் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அவை மாற்றப்படலாம் அவற்றிற்குச் சேர்க்கப்படலாம் அவை திருத்தப்படலாம் அல்லது நீக்கப்படலாம். கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதியெதவும் கூட்டுத்தாபனத்தின் பொதுக்கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினரில் மூன்றில் இரண்டு பங்கினரின் வாக்குகளைக் கொண்டன்றி மாற்றப்படலாகாது, திருத்தப்படலாகாது அல்லது நீக்கப்படுதலாகாது அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாகாது :

ஆயின் அத்தகைய மூன்றில் இரண்டு பங்கானது பொதுக்கூட்டமொன்றில் வாக்களிப்பதற்கு உரித்துடைய உறுப்பினரின்

மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறைவானதாயிருத்தலாகாது.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*சங்கத்திடமிருந்து போமதியாகவுள்ளனவும் அதற்குச் செலுத்தப்படவுள்ளனவுமான தனிசுகள்.*

8. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் சங்கத்துக்குள்ள எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட சங்கத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்கள், உதவு தொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகச் சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்விதம் பொறிக்கப்படுதல் வேண்டுமென்பது.*

9. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது பணிப்பாளர் சபையின் எவரேனும் மூன்று உறுப்பினர்களது முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் சமூகமாயிருந்ததற்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களைக் கையொப்பமிடல் வேண்டும் என்பதுடன், அவ்விதம் ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுதலுக்குத் தனி வேறானதாதலும் வேண்டும்.

*அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை கூட்டுத்தாபனம் வைத்திருக்கலாம்.*

10. ஏதேனும் கொள்வனவின், மாலியக்கொடையின், கொடையின், மரண சாதனத்திலுள்ள கையளிப்புக்கிணங்க மரணசாதனத்தின் பயனுக அல்லது வேறு வகையாக அதற்குரித்தாக்கப்படக்கூடியவாறான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் பெறவும், வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி தகுதியுடையதாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது, வேறு வகையில் கையுதிர்க்கவுள்ள முழுத் தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படலும் வேண்டும்.

*குடியரசினதும் வேறு ஆட்களினதும் உரிமைகளைப் பேணல்.*

11. இச்சட்டத்திலடங்கியுள்ள எதுவும் இலங்கைக் குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலாகாது அல்லது பாதித்தலாகாது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்குரிய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ, இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.